**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.4/20**
**வழக்கு சாட்சி – அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவசங்கரி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | குணசேகர் | தொழில் | வங்கியில் பணிபுரிகிறேன். |
| கிராமம் | கொடுவிலார்பட்டி | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.05.24

**( எதிரிகள் வழக்கிலிருந்து ஆஜராவதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

என்னுடைய முழுப்பெயர் சிவசங்கரி. சங்கரி என்று கூப்பிடுவார்கள். வழககில் சங்கரி என்று காட்டப்பட்டுள்ளது. நான் தற்போது தேனி சென்ட்ரல் பேங்க ஆப் இந்தியா வங்கியில் கிளர்க்காக பணிபுரிந்து வருகிறேன். அசா1 சுப்புராமை தெரியும். அசா1 சுப்புராம் ஸ்ரீரெங்காபுரம் சென்ட்ரல் பேங்க ஆப் இந்தியா வங்கி கிளையில் மாடு வளர்ப்பிற்காக லோன் வாங்கியிருந்தார். 3,50,000 ரூபாய் லோன் வாங்கியிருந்தார். சிறிது நாட்கள் கழித்து மேற்படி லோனை திருப்பி செலுத்திமுடித்துவிட்டார். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது.

**<u>அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக்கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

கடந்த 11.9.15 அன்று அசா1 எங்களது வங்கியில் வந்து நிலத்தை அடமானம் வைத்து லோன் பெற்றார் என்றும், மேற்படி லோன் குறித்து ஜெகதீசன் என்ற நபர் வங்கிக்கு வந்து எவ்வளவு பணம் மேற்படி தொகை பாக்கி உள்ளது என்று கேட்டு சென்றார் என்றும், அதன்பின்னர் 28.5.18 அன்று ரூ 1, 96,000/–த்தை ஜெகதீசன் சுப்புராமுக்கு செலுத்தி அடமான பத்திரத்தை வங்கியிலிருந்து மீட்டு சென்றார் என்றும், போலிச் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை என தெரிவிக்கப்பட்டது.